பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

05 03 2025 **WEDNESDAY** **12.40 PM**

ஆகாஷவாணி
<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நடப்பு நிதியாண்டின் பிப்ரவரி மாதம் வரை 167 மில்லியன் டன் நிலக்கரி உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக நிலக்கரி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

2. சர்வதேச மகளிர் தின கொண்டாட்டங்களையொட்டி, மாதிரி மகளிர் கிராம பஞ்சாயத்துகளை இன்று புதுதில்லியில் மத்திய அரசு தொடங்கியுள்ளது.

3. தமிழகத்தில் மக்களவைத் தொகுதி மறுசீரமைப்பு விவகாரம் தொடர்பாக நடைபெற்ற அனைத்துக்கட்சி கூட்டத்தில் பிஜேபி உள்ளிட்ட ஐந்து கட்சிகள் பங்கேற்கவில்லை.

4. போரினால் பாதிக்கப்பட்ட காஸா மறுசீரமைப்புப்பணிகளுக்கு 53 பில்லியன் டாலர் உதவி செய்ய அரபு நாடுகள் முன்வந்துள்ளன.

5. **Orleans** மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பிரித்வி கிருஷ்ணமூர்த்தி – சாய் பிரதீக் இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<>>>>

வேளாண்மை மற்றும் விவசாயிகளுக்கான நலத்திட்டங்களை மத்திய அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் சிறப்பாக செயல்படுத்தி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டியுள்ளார்.

திரு சௌகானின் பிறந்த நாளையொட்டி பிரதமர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், கிராமப்புறங்களில் விவசாயத்தை ஊக்குவிப்பதற்கான திட்டங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் அவர் பணியாற்றியுள்ளார் என்றும் கூறியுள்ளார்.

ஒடிஷா முதலமைச்சர் திரு பிஜு பட்நாயக்-கின் பிறந்தநாளையொட்டி பிரதமர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், மாநிலத்தின் வளர்ச்சிக்காக திரு பட்நாயக் முக்கிய பங்காற்றியவர் என்றும், மக்களுக்கான அதிகாரத்தை உறுதி செய்ய வேண்டும் என்பதில் அவர் முனைப்புடன் செயல்பட்டு வருவதாகவும் கூறியுள்ளார்.

ஜனநாயக மாண்புகளை பின்பற்ற வேண்டும் என்பதில், திரு பட்நாயக் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளார் என்றும் பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>

நடப்பு நிதியாண்டின் கடந்த மாத இறுதிவரை 167 மில்லியன் டன் நிலக்கரி உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக நிலக்கரித்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

நாட்டில் வர்த்தக ரீதியாக பராமரிக்கப்பட்டுவரும் நிலக்கரி சுரங்கங்களில் கடந்த ஆண்டை காட்டிலும், நடப்பாண்டில் 32 சதவீதம் நிலக்கரி உற்பத்தி கூடுதலாக கிடைத்திருப்பதாகவும் அமைச்சகத்தின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் 170 மில்லியன் டன் நிலக்கரி சுரங்கங்களிலிருந்து பயன்பாட்டிற்காக அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்சாரம், எஃகு மற்றும் சிமெண்ட் உற்பத்தித்துறைகளுக்கு தடையில்லாமல், நிலக்கரி கிடைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டின் வளர்ச்சிக்கு ஆதாரமாக விளங்கும் நிலக்கரித்துறையை மேம்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாகவும் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை உத்தராகண்ட் செல்கிறார்.

**Mukhwa** –வில் உள்ள மாதா கங்கா கோவிலில் பிரதமர் தரிசனம் செய்து சிறப்பு பூஜையிலும் கலந்துகொள்கிறார்.

பின்னர், **Harsil** செல்லும் பிரதமர், மலையேற்றம் மற்றும் இருசக்கர வாகனப் பேரணியை கொடியசைத்து தொடங்கிவைக்க உள்ளார்.

உத்தராகண்ட் மாநில அரசு இவ்வாண்டு குளிர்கால சுற்றுலாத்திட்டத்தை தொடங்கியுள்ளது.

இம்மாநிலத்தில் உள்ள கங்கோத்ரி, கேதார்நாத், பத்ரிநாத், யமுனோதிரி உள்ளிட்ட புனித தலங்களை இதுவரை ஆயிரக்கணக்கான பக்தர்கள் தரிசித்துள்ளனர்.

ஆன்மிக சுற்றுலாவை ஊக்குவிக்கும் விதமாக, உத்தராகண்ட் அரசு இந்த முயற்சியை எடுத்துள்ளது.

உள்ளூர் பொருளாதாரத்தை வலுப்படுத்தவும், சுற்றுலா வர்த்தகத்தை ஊக்குவிக்கவும் இந்த திட்டம் பெரிதும் உதவிடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>

சர்வதேச மகளிர் தின கொண்டாட்டங்களின் ஒருபகுதியாக மகளிருக்கான மாதிரி கிராம பஞ்சாயத்துகளை, பஞ்சாயத்துராஜ்துறை இணையமைச்சர் திரு எஸ் பி சிங் பாஹல், சுகாதாரத்துறை இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் ஆகியோர் இன்று புதுதில்லியில் தொடங்கிவைத்தனர்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் மகளிர் கிராம பஞ்சாயத்துகள் அமைய வேண்டும் என்ற நோக்கில், இந்த திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

மகளிர் தலைமையிலான நிர்வாகத்திற்கு உத்வேகம் அளிக்கும் வகையில், இந்த முன்னோடித் திட்டத்தை மத்திய அரசு கொண்டுவந்துள்ளது.

பல்வேறு அமைச்சகங்களின் பிரதிநிதிகள், சர்வதேச அமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்டோரும் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

<<<<<>>>>

தில்லி ரயில்வே மண்டலத்தில் ஐந்து உயரதிகாரிகள் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் 15-ஆம் தேதி தில்லி ரயில் நிலையத்தில் இருந்து, பிரயாக்ராஜில் நடைபெற்ற கும்பமேளாவுக்கு செல்லவிருந்த ரயில்களுக்காக அதிக அளவில் நடைமேடைகளில் மக்கள் கூடியதால் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் 18 பேர் உயிரிழந்தனர். 15 பேருக்கு காயம் ஏற்பட்டது.

இதுதொடர்பாக, வடக்கு ரயில்வேயின் தில்லி மண்டலம் நடத்திய விசாரணையின் அடிப்படையில், தில்லி மண்டல ரயில்வே மேலாளர், கூடுதல் மேலாளர், ரயில்வே பாதுகாப்புப்படையின் உதவி ஆணையர் ஆகியோர் பணியிட மாற்றம் செய்யப்பட்டவர்களில் அடங்குவர்.

தில்லி பிரிவின் புதிய ரயில்வே மேலாளராக திரு **Pushpesh Tiripathi** நியமிக்கப்பட்டுள்ளார்.

<<<<<>>>>

மக்கள் ஆரோக்கியத்துடன் வாழ மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதன் ஒருபகுதியாக, பிரதமரின் மக்கள் மருந்தகங்கள் மூலம் குறைந்த விலையில் தரமான மருந்துப்பொருட்கள் கிடைப்பதாகவும், இது தங்களுக்கு பெருமளவு பயனுள்ளதாக இருப்பதாகவும் தமிழகத்தின் வேலூர் மாவட்டத்தை சேர்ந்த பயனாளிகள் தெரிவித்தனர்.

*(சவுண்ட் பைட் - பயனாளிகள் - 45 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>

மக்கள் தொகை அடிப்படையிலான தொகுதி மறுசீரமைப்பு தமிழகம் மற்றும் தென் மாநிலங்களுக்கு ஏற்புடையதாக இல்லை என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தலைமையில் சென்னையில் இன்று நடைபெற்ற அனைத்துக்கட்சி கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இப்பிரச்சினை குறித்து மத்திய அரசிடம் விவாதிக்க தென் மாநில பிரதிநிதிகள் அடங்கிய கூட்டுக்குழுவை அமைக்க வேண்டும் என்று மற்றொரு தீர்மானம் கூறுகிறது.

தொகுதி மறுசீரமைப்பால் தமிழகத்தின் குரல் நாடாளுமன்றத்தில் எழுப்ப இயலாத சூழ்நிலை ஏற்படும் என்றும் அந்தத் தீர்மானம் கூறுகிறது.

தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கையை 30 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்க வேண்டும் என்றும் மற்றொரு தீர்மானம் கூறுகிறது.

இக்கூட்டத்தில் பேசிய முதலமைச்சர், மத்திய அரசின் இந்த நடவடிக்கையால், தமிழகம் எட்டு மக்களவைத் தொகுதிகளை இழக்க நேரிடும் என்று கூறினார்.

நாடாளுமன்ற தொகுதிகளின் எண்ணிக்கையை குறைப்பது தமிழகத்திற்கு அநீதியை ஏற்படுத்தும் என்றும் திரு மு.க.ஸ்டாலின் கூறினார்.

இன்றைய அனைத்துக்கட்சி கூட்டத்தில் பிஜேபி உள்ளிட்ட ஐந்து அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் பங்கேற்கவில்லை.

தொகுதி மறுசீரமைப்பு விவகாரம் தொடர்பாக, முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கொண்டுவந்த தீர்மானத்திற்கு அஇஅதிமுக உள்ளிட்ட கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

<<<<<>>>>

தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோவில் கடற்கரையில் ஏற்பட்டுள்ள கடல் அரிப்புகள் குறித்து இறுதிக்கட்டமாக தேசிய கடலோர ஆராய்ச்சி மையத்தின் இயக்குனர் திரு ரமண மூர்த்தி இன்று ஆய்வு மேற்கொண்டார்.

கடற்கரையில் ஏற்பட்டுள்ள கடல் அரிப்புகளை நேரில் பார்வையிட்ட அவர், மீன்வளத்துறை அதிகாரிகளிடமும் ஆலோசனை நடத்தினார்.

இந்த ஆய்வு குறித்த அறிக்கை வரும் வெள்ளிக்கிழமையன்று மாநில தலைமைச்செயலர் தலைமையில் நடைபெறும் ஆய்வுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று திரு ரமணமூர்த்தி தெரிவித்தார்.

<<<<<>>>>

இலங்கையில் உள்ள பெரிய நீர்த்தேக்கங்களில் மிதவை சூரிய மின் உற்பத்தி கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படும் என்று அந்நாட்டின் எரிசக்தித்துறை அமைச்சர் திரு குமார ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

அந்நாட்டு நாடாளுமன்றத்தில் இதனை தெரிவித்த அவர், நான்கு பெரிய நீர்த்தேக்கங்களில் 234 மெகாவாட் சூரிய மின்சக்தி முதல் கட்டமாக உற்பத்தி செய்யப்படும் என்று கூறினார்.

இந்த மின் திட்டங்களை செயல்படுத்துவதில் சுற்றுச்சூழல் அம்சங்கள் குறித்தும் ஆய்வு செய்யப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<>>>>

அமெரிக்காவுக்கு பல ட்ரில்லியன் டாலர் செலவினத்தை ஏற்படுத்தும் பாரிஸ் பருவநிலை ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாக எடுத்த முடிவு சரியானதுதான் என்று அந்நாட்டு அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் கூறியுள்ளார்.

அமெரிக்க நாடாளுமன்ற கூட்டுக்கூட்டத்தில் உரையாற்றிய திரு ட்ரம்ப், உலக சுகாதார அமைப்பு உள்ளிட்ட பல சர்வதேச அமைப்புகளிலிருந்து விலக வேண்டும் என்ற துணிச்சலான முடிவை தாம் எடுத்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அமெரிக்காவின் அன்றாட செலவினங்களுக்காக தமது நிர்வாகம் கடுமையாக போராட வேண்டியுள்ளதாகவும் திரு டொனால்டு ட்ரம்ப் கூறினார்.

<<<<<>>>>

போரினால் கடுமையாக பாதிக்கப்பட்ட காஸாவின் மறுசீரமைப்புப்பணிகளுக்கு அரபு நாடுகள் 53 பில்லியன் டாலர் உதவி செய்ய முன்வந்துள்ளன.

கெய்ரோவில் நடைபெற்ற அரபு நாடுகளின் அவசர மாநாட்டில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் பேசிய எகிப்து வெளியுறவு அமைச்சர் திரு **Badr Abdelatty,** போரினால் சேதமடைந்த காஸா விமான நிலையம், துறைமுகம், உள்ளிட்டவற்றை சீரமைப்பதற்கு இந்த நிதி பயன்படுத்தப்படும் என்று கூறியுள்ளார்.

<<<<<>>>>

**Orleans** மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பிரித்வி கிருஷ்ணமூர்த்தி – சாய் பிரதீக் இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

பிரான்சில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 21-15, 21-18 என்ற செட் கணக்கில், டென்மார்க்கின் வில்லியம் **Kryger** – கிறிஸ்டியன் **Faust** இணையை வென்றது.

-----

**Gurugram** ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைதேசி சௌத்ரி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

***<<<<>END>>>***